பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 18 | சனிக்கிழமை | 02.09.2023 | அதிர்வு 32

## சீனாவா? இந்தியாவா? டக்ளஸ் தெளிவான பதில்

சீனாவா, இந்தியாவா எனக் கேட்டால் இந்தியாவிற்கே முன்னுரிமை எனக் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கைத்தொழில் அமைச்சு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி 06▶

### 'பாதுகாப்பு உறவுகளை மறுபரிசீலனை செய்ய' வரவிருந்த

# ராஜ்நாத் சிங்கின் விஜயம் திடீரென்று ஒத்திவைப்பு!

## கடைசி நேரத்தில் நேற்றிரவு அறிவிப்பு



**கொழும்பு, செப்ரெம்பர் 02**

இரண்டு நாள் பயணமாக இன்று இலங்கைக்கு வரவிருந்த இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் இலங்கை விஜயம் நேற்று கடைசி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

இந்தியத் தூதரகம் நேற்றிரவு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. 04▶

# இங்கு சீனாவுக்குப் போட்டியாக இந்தியா செயற்படுவதை உடன் நிறுத்த வேண்டும்!

## விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில கூட்டாக வலியுறுத்து

"இலங்கை விவகாரத்தில் சீனாவுக்குப் போட்டியாக இந்தியா செயற்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டும்."

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ எம்.பி., பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில எம்.பி. ஆகியோர் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில் –

"இலங்கைக்கு எந்த நாட்டவர்களும் வந்து போகலாம். இலங்கை அரசின் அனுமதியுடன் எந்த நாட்டுக் கப்பலும் இங்கு வந்து தரித்து நிற்கலாம். இலங்கைக்கு எந்த நாடும் 06▶



# கட்டுப்பாட்டை மீறி சீறிப் பாய்ந்த மோ.சைக்கிள் மீது எஸ்.ரீ.எப். சூடு

களனிமுல்ல பாலத்துக்கு அருகில் பொலிஸ் தடையையும் கட்டுப்பாட்டையும் மீறிப்ப யணித்த மோட்டார் சைக்கிளின் மீது பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

எனினும், அந்த மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## இரகசியம்



இந்தியாவில் கிடப்பில் போடப்பட்டிருந்த இலங்கைத் தமிழர் பிரச்சினை மீண்டும் தூசுதட்டிமேசைக்கு-மேடைக்கு – எடுத்து வரப்படவிருப்பதாகத் தெரிய வருகின்றது.

விரைவில் இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல். இப் போதைய 03▶

### யாழ்ப்பாணம் ஊரெழுவைப் பூர்வீகமாகக் கொண்ட

# தமிழர் தர்மன் சண்முகரத்தினம் சிங்கப்பூரின் ஜனாதிபதியானார்






சிங்கப்பூரின் புதிய ஜனாதிபதியாக யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட தர்மன் சண்முகரத்தினம் 70 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

சிங்கப்பூரில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குப் பதிவு நேற்று நடைபெற்றது. இதில் தமிழரான தர்மன் சண்முகரத்தினம் வெற்றி பெற்றுள்ளார் என அந்நாட்டுத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

1957 ஆம் ஆண்டில் சிங்கப்பூரில் பிறந்தவர் தர்மன். இவரது பாட்டனார் இலங்கை, யாழ்ப்பாணம் மாவட்டம், ஊரெழு என்ற இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

இந்நிலையில் ஈழத்தமிழரின் வம்சமான தர்மன் சண்முகரத்தினம், சீன வம்சாவளியைச் சேர்ந்த காச்சோங் மற்றும் டான்தின் லியான் ஆகியோர் சிங்கப்பூர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டனர்.

இவர்கள் மூவர் இடையே கடும் போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்பட்டது. மூவரும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இருப்பினும் தர்மன் சண்முகரத்தினம் 70 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியில் இருந்த தர்மன் சண்முகரத்தினம் தனது பதவியை இராஜிநாமா செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உழவு இயந்திரம் குடைசாய்ந்ததில் 15 வயது சிறுவன் பரிதாப மரணம்

## மற்றொரு சிறுவன் படுகாயம் வவுனியாவில் நேற்று சோகம்



– கே. வசந்தரூபன் –

வவுனியா, பூவரசங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மடுக்குளம் பகுதியில் உழவு இயந்திரம் குடைசாய்ந்ததில் 15 வயது சிறுவன் ஒருவன் சாவடைந்துள்ளான். அத்துடன் மேலுமொரு சிறுவன் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

நேற்று மாலை இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:–

வவுனியா, பூவரசங்குளம், மடுக்குளம் பகுதியில் உள்ள குளத்தின் அணைக்கட்டில் மண் ஏற்றியவாறு உழவு இயந்திரம் ஒன்று நேற்று மாலை பயணித்துள்ளது. இதன்போது திடீர் எனச் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த உழவு இயந்திரம் முற்றாகக் குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது, உழவு இயந்திரத்தின் பின்பகுதியில் அமர்ந்திருந்த இரண்டு சிறுவர்கள் படுகாயமடைந்த நிலையில் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு பூவரசங்குளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக இரண்டு சிறுவர்களும் வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். எனினும், அவர்களில் ஒருவர் வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு வருவதற்கு முன்னரே மரணித்தார் என்று வவுனியா வைத்தியசாலை வைத்தியர்கள் தெரிவித்தனர்.

சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த 15 வயதான ச.சதுசன் என்ற சிறுவன் உயிரிழந்தான். மற்றொரு சிறுவன் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பூவரசங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பொதுஜன பெரமுனவை விமர்சிக்க மைத்திரிக்கு அருகதையே இல்லை

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை விமர்சிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எந்த அருகதையும் இல்லை. மொட்டு வின் ஆட்சிதான் இப்போதும் தொடர்கின்றது என்பதை உணராமல் பைத்தியம் போல் உளறுகின்றார் மைத்திரி பால."

– இவ்வாறு போட்டுத் தாக்கியுள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன.

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி எங்களுக்கு எந்த விதத்திலும் சவாலாக அமையாது. ஆட்சியையும், பத விகளையும் கைவிட்டு ஓடி ஒளிந்த மொட்டுக் கட்சிக்கு அடுத்த தேர்தலில் மக்கள் ஆணை கிடைக்காது. அடுத்த தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றுவதே எமது கட்சி யின் எதிர்பார்ப்பு" – என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதில் வழங்கும் வகையிலேயே ராஜபக் ஷக்களின் முக்கிய சகாவான ரோஹித அபேகுணவர்த் தன மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நாசமாக்கிவிட்டார் மைத்திரிபால. அந்தக் கட்சியால் இனிமேல் மீண்டெழ



முடியாது. சு.கவை மக்கள் அடியோடு நிராகரித்து விட்டார்கள். இனிமேல் அந்தக் கட்சிக்கு மக்கள் ஆணை கிடைக்காது. இது பைத்தியம் போல் உளறும் மைத்திரிபாலவுக்குத் தெரி யும்.

மொட்டுக் கட்சி மக்கள் ஆணையை இழக்கவில்லை. கடந்த வருடம் சதி நடவடிக்கைகளால் ஜனாதிபதி, பிரத மர் பதவிகளில் மாற்றம் ஏற்பட்டாலும் மொட்டுவின் ஆட் சியே இன்னமும் தொடர்கின்றது. எந்தத் தேர்தல் நடந்தா லும் மொட்டுவே வெற்றியடையும். ராஜபக்ஷக்களா லும் அவரின் சகாக்களாலும் வளர்த்தெடுக்கப்பட்ட பல மிக்க கட்சியே மொட்டு." – என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் இன்னும் எட்டு மாதங்கள்தான். அது முடியும் போது நாடளாவிய ரீதியில் பொதுத் தேர்தல்.

இரண்டு ஆட்சி காலம் தொடர்ந்து பதவியில் இருக்கும் மோடியின் பாரதீய ஜனதாக் கட்சி அரசை வீட்டுக்கு அனுப்பும் ஒரே முயற்சியாக காங்கிரஸ் உட்பட எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்று திரளத் தொடங்கியுள்ளன.

காங்கிரஸுடன் தமிழகம் உட்பட பல் வேறு மாநிலங்களில் ஆட்சியில் இருக்கும் பல எதிர்க்கட்சிகள் இதற்காகக் கூட்டுச் சேர்ந்து 'இண்டியா' என்ற கூட்டணியை உருவாக்கியுள்ளன.

எதிர்க்கட்சிகளின் 'இண்டியா' கூட்டணி வேகமாகச் செல்வாக்கைப் பெருக்கி வருவதால் நிலைமை முற்றி, அதிகா ரம் கைய விட்டுப் போகும் நிலைமை ஏற்படுவதற்கு முன்னர், நேரத்துடன் முற்கூட்டியே தேர்தலை நடத்தி, ஆட் சியைத் தக்க வைப்பது குறித்து மோடி அரசு தீவிரமாக ஆலோசிப்பதாகக் கூறப்படுகின்றது. அதனால் இந்த வருட இறுதியில் திடீர்ப் பொதுத் தேர்தல் இந்தி யாவில் நடந்தாலும் ஆச்சரியப்படு வதற்கு இல்லை என்பதுதான் அங்குள்ள நிலைமை.

அதற்காகவோ, என்னவோ நிலுவை யில் உள்ள சில முக்கிய சட்டமூலங்களை அவசர அவசரமாக நிறைவேற்றி, காரி யத்தை முடிப்பதற்காக, வழமைக்கு மாறாக, விடுமுறைக் காலத்தில் முற் கூட்டியே திடீரென்று நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஒன்று மிக அவசரமாக அழைப்பட்டிருக்கின்றது. அது நடந்து முடிந்து, நிலுவையில் இருக்கும் முக்கிய சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டதும், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, பொதுத் தேர்தல் திகதி அறிவிக்கப்படலாம் என்று நம்பப்படுகின்றது.

இம்முறை தேர்தலில் தெற்கில் – குறிப் பாகத் தமிழகத்தில் – ஈழத் தமிழர் விவகா ரம், கச்சதீவுப் பிரச்சினை, மீனவர்கள் நெருக்கடி போன்றவை முக்கியமான – தீர்க் கமான – இடத்தைப் பெறும் என்று கூறப்படுகின்றது.

ஈழத் தமிழர் விவகாரத்தில் எத்தகைய தீர்வை நாடுவோம் என்பது குறித்து இரண்டு பிரதான தரப்புக்களும் – பாரதீய ஜனதா அணியும், காங்கிரஸ் – தி.மு.க. உட்பட்ட எதிரணியும் – தெளிவான நிலைப் பாடு எடுத்து, அதனைத் தத்தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவிக்க இருக்கின் றன என்று தெரிகின்றது. இரண்டு கூட் டணிகளிலும் அங்கம் வகிக்கும் அ. தி.மு.க., தி.மு.க. இரண்டும் இதனை வலியுறுத்துகின்றன என்று தெரிகின் றது.

இது தொடர்பில் இருதரப்புகளின் முக்கிய உதவியாளர்கள் சிலர் இலங்கைத் தமிழர் தரப்புகளுடன் ஊடாடி வருகின்ற னர் என்றும் செய்திகள் கசிந்துள் ளன.

தேர்தல் பிரச்சாரத்தில் சூட்டை அதிகரிப் பதற்காக நாடாளுமன்றக் கலைப்புக்கு முன்னர் – தேர்தல் திகதி அறிவிக்கப்பட முன்பு – இலங்கைத் தமிழர்களின் தலை வர்கள் புதுடில்லிக்கு அழைக்கப்பட்டு, அவர்கள் விடயத்தில் மோடியும் அவரது அரசுத் தரப்பினரும் மிகக் கரிசனை யாக உள்ளனர் என்ற படம் காட்டப்பட வும் வாய்ப்புள்ளதாகத் தெரிகின் றது.

இதனால் மூன்று, நான்கு வருடங் களாக நிலுவையில் நிற்கும் மோடி – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடையே யான புதுடில்லி சந்திப்பும் இப்போது நடந்தேறக் கூடிய வாய்ப்புகள் கருகட்டி வருகின்றன என்று செய்திகள் கசிகின் றன.

என்ன, புதுடில்லிச் சந்திப்பு என்றால் யார்,யார் போவது, யார், யாரைக் கூட்டிப் போவது, யாரை வெட்டி விடுவது, எந்தக் கூட்டமைப்பின் அல்லது கூட்டணியின் பெயரில் போவது என்றெல்லாம் நமது தமிழ் கட்சித் தலைவர்களிடையே 'அக்கப் போர்' ஆரம்பமாகிவிடும். அதையும் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் கொழும்புக்கு வந்து, தமிழ்க் கட்சிகளை எல்லாம் ஒன்றாகச் சந்தித்து, அக்கப் போரைத் தீர்த்து வைத்துத்தான் புதுடில் லிக்குப் போக நேர்ந்தாலும் கூட ஆச்ச ரியப்படுவதற்கு இல்லை.

# மாளிகாவத்தையிலும் துப்பாக்கிச் சூடு காயமடைந்த நபர் வைத்தியசாலையில்

மாளிகாவத்தையில் உள்ள ஓய்வூதியக் கொடுப்பனவு திணைக்களத்துக்கு முன்னால் நேற்றுப் பகல் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த இருவர் இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

காயமடைந்தவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டமைக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# யூனியன் கல்லூரி முன்பாக பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம்




யாழ்ப்பாணம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை காலை பாடசாலை மாணவர்களின் பெற்றோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலை பிரதான நுழைவாயில் முன்பாக ஒன்றுகூடிய பெற்றோரே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியரொருவர் பாடசாலைக்கும் பாடசாலை அதிபருக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்கள் வாயிலாக செயல்பட்டார் எனத் தெரிவித்தே பெற்றோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆசிரியர் சங்கமொன்றைப் பயன்படுத்தித் தமது சொந்த நலனை அடிப்படையாக கொண்டு பாடசாலைக்கு எதிரான செயற்பாடுகளை அவர் தொடர்ந்தும் செய்கிறார் எனக் குற்றம் சாட்டிய பெற்றோர் அந்த ஆசிரியருக்கு இடமாற்றம் வழங்கவேண்டும் எனத் தெரிவித்தனர்.

சில வாரங்களுக்கு முன்பு இந்தச் சம்பவம் தொடர்பாக பாடசாலை மாணவர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# மருந்து இறக்குமதியாளர்களுக்கு 1,300 கோடி ரூபா நிலுவையாம்!

மருந்து இறக்குமதியாளர்களுக்கு நிலுவைக் கட்டணமாக 1,300 கோடி ரூபா செலுத்த வேண்டியுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கட்டணத்தைத் திருப்பிச் செலுத்துவதற்காக திறைசேரியிடமிருந்து நிதி கோரப்பட்டுள்ளது என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கட்டம் கட்டமாக நிதியை விடுவிப்பதற்கு திறைசேரி இணங்கியுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நிலுவைத் தொகையை செலுத்தாத காரணத்தால் சில மருந்து இறக்குமதியாளர்கள், மருந்துகளை இறக்குமதி செய்வதில் தயக்கம் காட்டுகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தற்போது நாட்டில் அத்தியாவசிய மருந்துகளின் தட்டுப்பாடு 161 ஆக குறைவடைந்துள்ளது.

இந்த மருந்துகள் அனைத்தும் முற்பதிவு செய்யப்பட்டுள்ளன்ச் எனவும் அவை அடுத்த சில வாரங்களில் கட்டம் கட்டமாக நாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## ராஜ்நாத் சிங்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், இருதரப்பு பாதுகாப்பு உறவுகளை மீளாய்வு செய்வதற்காக இன்று இலங்கைக்கு விஜயம் செய்யவிருந்தார்.

இரண்டு தினங்கள் அவர் இலங்கையில் தங்கியிருப்பார் என முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

“தவிர்க்க முடியாத காரணங்களினால் அவரின் விஜயம் ஒத்திவைக்கப்பட்டதாக“ இப்போது அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

“ஷி யாங் – 6“ என்ற தனது ஆராய்ச்சிக் கப்பலை கொழும்பில் தரிப்பதற்கும் இலங்கைக் கடலில் ஆய்வு மேற்கொள்வதற்கும் சீனா வைத்த கோரிக்கைக்கு இணங்கிச் செயற்பட கொழும்பு விருப்பம் காட்டியுள்ள நிலையில், பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் சனிக்கிழமை(இன்று) முதல் இரண்டு நாள்களுக்கு “பாதுகாப்பு உறவுகளை மறுபரிசீலனை செய்ய” இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் என முன்னர் அறிவிக்கப்பட்டிதுந்தது.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சகம் முன்னதாக நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில், “இலங்கையுடனான இந்தியாவின் பாதுகாப்பு உறவுகளின் முழு வரம்பும் சந்திப்புகளின் போது மதிப்பாய்வு செய்யப்படும்” என்று கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அவர் இலங்கை விஜயத்தின் போது இலங்கை ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோருடன் பேச்சு நடத்தவிருந்தார்.

இதற்கிடையில் –

இலங்கை ஜனாதிபதி விக்கிரமசிங்க ஒக்டோபர் மாதம் சீனாவிற்கு விஜயம் செய்யவுள்ளார். அந்த மாதம் ஷி யாங் 6 கப்பல் அனுமதி வழங்கப்பட்டால் அது இலனகைக் கடலில் ஆய்வுகளை ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

கொழும்பில் சீனக் கப்பலை அனுமதிக்கும் எந்த முடிவும் டெல்லியின் பாதுகாப்பு நலனைக் கருத்தில் கொள்ளாது என்று இலங்கை அரசுக்கு இந்தியா கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

ஒரு வருடத்தில் இரண்டாவது முறையாக சீன ஆராய்ச்சிக் கப்பலுக்கு அனுமதி வழங்க இலங்கை விருப்பம் தெரிவித்திருப்பது மோடி அரசாங்கத்திற்குப் பிடிக்கவில்லை என்று இந்திய அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 2014 ஆம் ஆண்டு கொழும்பு துறைமுகத்தில் சீனாவின் பாரம்பரிய நீர்மூழ்கிக் கப்பல் நிறுத்தப்பட்டபோதும், கடந்த ஆண்டு ஹம்பாந்தோட்டையில் “வுவான் யாங் 5” என்ற உளவுக் கப்பல் நிறுத்தப்பட்டிருந்தபோதும் இந்தியா கவலை தெரிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது.



# நல்லூரான் 12 ஆம் நாள் உற்சவ வீதியுலா

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழாவின் 12 ஆம் மாலை உற்சவம் நேற்று இடம்பெற்றது. வள்ளி,தெய்வானை சமேதராக, முருகப்பெருமான் கிளி வாகனத்தில் வீதியுலா வந்தார்.

படங்கள் :- பிரபாகரன் டிலக்சன்









# வெளிநாடுகளுக்குச் செல்பவர்களின் எண்ணிக்கை வடக்கின் 5 மாவட்டங்களிலும் கணிசமாக உயர்வு

– என்.புவியரசன் –

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட பின்னர் தொழில்வாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் செல்பவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித் திருப்பதை தகவல் அறியும் சட்டத்தின் கீழ் மாவட்டச் செயலகங்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக மாவட்டக் கிளைகளிடமிருந்து பெறப் பட்ட தரவுகள் உறுதிப்படுத்துகின் றன.

கடந்த காலங்களில் போர் மற்றும் பாதுகாப்பு காரணங்களை முன்னிறுத் தியே லட்சக் கணக்கானோர் நாட்டை விட்டு வெளியேறினர். எனினும் நாட்டில் கடந்த வருடம் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதைத் தொடர்ந்து தொழில்தேடி வெளிநாடுகளுக்குச் செல்வோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.

இவ்வாறு நாட்டைவிட்டுச் செல்பவர் களின் எண்ணிக்கை கடந்த காலங் களை விட 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் இரட்டிப்பாக அதிகரித் துள்ளதை இத்தகவல்கள் உறுதிப் படுத்துகின்றன.

இலங்கையின் 25 நிர்வாக மாவட் டங்களில் போரினால் அதிகம் பாதிக் கப்பட்ட 05 நிர்வாக மாவட்டங்களான வவுனியா, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலிருந்து 2020.01.01 முதல் 2023.06.30 வரையிலான 4 ஆண்டு காலப்பகுதியில் வெளிநாடுகளுக்குச் சென்றவர்களின் விவரங்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் கிடைக் கப் பெற்றன.

அதற்கமைய –

வவுனியா மாவட்டத்தில் 2020 ஆம் ஆண்டு 46 பேரும் , 2021 ஆம் ஆண்டு 60 பேருமென மொத்தமாக 104 பேரே இரு ஆண்டுகளில் பயணித்த போதும் 2022 ஆம் ஆண்டில் மட்டும் 600 பேர் பயணித்துள்ளனர். அதே நேரம் நடப்பாண்டான 2023 இன் ஜுன் 30 வரையிலான காலப்பகுதியில் 283 பேர் பயணித்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்க ளப்பு மாவட்டத்தில் இருந்து 2020 ஆம் ஆண்டு 572 பேரும், 2021 ஆம் ஆண்டில் 725 பேரும் பயணித்த நிலை யில் 2022 இல் மாத்திரம் 1,104 பேர் பயணித்துள்ளனர். 2023 இல் ஜுன் 30 வரையிலான காலப் பகுதியில் 1,403 பேர் பயணித்துள்ளனர்.

இதேநேரம் முல்லைத்தீவு மாவட்டத் தில் 2020 இல் 08 பேரும்,2021 இல் 12 பேருமே பயணித்த நிலையில், 2022 இல் 248 பேர் பயணித்துள்ளமையோடு 2023 ஜுன் 30 வரையில் 129 பேர் வெளிநாடுகளுக்குப் பயணித்துள்ள னர்.

மன்னார் மாவட்டத்தினைப் பொறுத்த மட்டில் 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையில் பயணித்த அனைவருமே பெண்களாகவே இருப்பதோடு 2020 ஆம் ஆண்டில் 30 பேரும், 2021 இல் 36 பேரும், 2022 ஆம் ஆண்டில் 297 பேரும் வெளிநா டுகளுக்கு பயணித்துள்ளனர். 2023 ஆம் ஆண்டு 155 பேர் பயணித்துள்ள னர் என மாவட்ட வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் வழங்கிய தகவல் உறுதி செய்கின்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2020 ஆம் ஆண்டில் 180 பேரும், 2021 ஆம் ஆண்டில் 463 பேரும், 2022 இல் 1,436 பேர் பயணித்துள்ளதோடு 2023 ஆம் ஆண்டின் ஜுன் மாதம் வரையிலும் 623 பேர் பயணித்துள்ளனர் என யாழ். மாவட்டச் செயலகம் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பதிலளித்துள்ளது.

இவற்றிற்கமைய 5 நிர்வாக மாவட் டங்களிலும் மொத்தமாக 2020 ஆம் ஆண்டில் 836 பேரும், 2021 ஆம் ஆண்டு ஆயிரத்து 296 பேரும் பயணித் துள்ளனர். 2022 ஆம் ஆண்டில் 3 ஆயிரத்து 685 பேர் பயணித்துள்ளனர். இது 2021 ஆம் ஆண்டினை விடவும் 3 மடங்கு அதிகமாகும். 2023 ஆம் ஆண்டின் ஜுன் மாதம் வரையிலும் 2 ஆயிரத்து 583 பேர் பயணித்துள்ளத னால் இந்த எண்ணிக்கையும் 2022 ஆம் ஆண்டின் எண்ணிக்கையை விஞ்சும் வாய்ப்புள்ளது.

# மீனவர்களின் சம்மேளனம் யாழ் நகரில் ஆர்ப்பாட்டம்






யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங் களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இழுவைமடித்தொழில் மற்றும் இந்திய மீனவர்களின் வரவை எதிர்த்து யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ் மாவட்டத்தை சேர்ந்த பாசையூர் கடல் தொழிலாளர் சங்கம், பருத்தித்துறை கடல் தொழிலாளர் சங்கம், அனலை தீவு கடற்றொழிலாளர் சங்கம், நெடுந்தீவு கடற் தொழிலாளர் சங்கம், யாழ் மாவட்ட கடற் தொழிலாளர் சங்கம் உள்ளிட்ட பல சங்கங்கள்

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டன.

இதன் போது மாவட்ட செயலக வாயிலிருந்து உள்ளே சென்று யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவவாதசுந்தரனிடம் மகஜர ஒன்றை ஆர்ப்பாட்டக்காரர்கள் கையளித்தனர்.

## இங்கு சீனாவுக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உதவிகளை வழங்கலாம். இந்தியா மாத்தி ரம்தான் இலங்கையின் தோழன் அல்ல.

இலங்கை மீது இந்தியாவுக்கு எவ்வ ளவு அக்கறை உண்டோ அதேயளவு அக்கறை சீனாவுக்கும் உண்டு. ஏனெனில் சீனாவும் இலங்கைக்கு அவசர நிலை மைகளின்போது உதவி வழங்கும் பிர– தான நாடாகும்.

இலங்கையைத் தனது நிகழ்ச்சி நிரலுக் குள் கொண்டுவந்து வடக்கு, கிழக்கை முழுமையாக அபகரிக்கவே இந்தியா விரும்புகின்றது. இதற்கு நாம் ஒருபோதும் அனுமதி வழங்கமாட்டோம்." – என்றார்.

## சீனாவா? இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சபை என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ள யாழ்ப்பாண கைத்தொழில் கண்காட்சியில் கலந்து கொண்ட நிகழ் வின் பின்னர் ஊடகவியலாளர்கள் கடற் றொழில் அமைச்சரிடம் கேள்வி கேட்ட பேதே அவர் இதனை தெரிவித்தார்.

சீனக் கப்பல் இலங்கை வருகை தர வுள்ளமை தொடர்பில் இந்த விடயம் ஒரு பேசு பொருளாகவுள்ளது. இந்த நிலையில் நீங்கள் சீனாவிற்கும் இந்தியாவிற்கும் விஜயம் மேற்கொண்டு வந்துள்ளமை யால் உங்களின் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர்களால் கேட்ட போது –

சீனா, இந்தியா இருநாடுகளும் தேவைதான். ஆனால் எதற்கு முக்கி யத்துவம் என்றால் இந்தியாவிற்கே முக்கியத்துவம் வ தருவேன். – என்றார்.

இதேவேளை, இந்திய பாதுகாப்பு அமைச்சர் இலங்கை வருகை தரவுள்ள நிலையில் அவரிடம் தமிழ் கட்சிகள் கடற் றொழில் பிரச்சினைகள் – குறிப்பாக எல்லை தாண்டும் மீனவர்கள் பிரச்சினை, அவர்களால் போதைப் பொருள் கடத் தல் இடம் பெறுகின்றமை போன்றவை தொடர்பில் கலந்துரையாட வேண்டும் எனக் கடற்றொழிலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளமை குறித்துக் கேட்டபோது –

போதைப் பொருள் கடத்தபடுவது தொடர்பில் அதனைக் கூறியவரிடம்தான் கடத்தல் தொடர்பில் கேட்கவேண்டும், அவர்களின் ஊகங்களுக்குப் பதில் கூற என்னால் முடியாது. அவர்களிடம்தான் அதனைக் கேட்க வேண்டும். மேலும், இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் இலங்கை வருகின்றபோது அவருடன் எமது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவேன். – என்றார்.

# நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கர்த்தினாலின் ஓரவஞ்சனை

'ஒரு கண்ணில் வெண்ணெய் மறு கண்ணில் சுண்ணாம்பு' - என்றொரு சொற்றொடர் உண்டு. கர்த்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் செயற்பாடு இப்படியான போக்கில்தான் அமைந்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தொடர்த் தாக்குதல் தொடர்பில் அவர் தொடர்ந்து வெளியிட்டு வரும் கருத்துக்கள் அவர் இத்தகைய நிலைப்பாட்டைத்தான் கைக்கொண்டு வருகிறார் என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளன.

இந்த விடயத்தை ஒட்டி அரசு மீது அவர் மீண்டும் பாய்ந்து இருக்கிறார். அவரது பாய்ச்சல் அல்லது அரசு மீதான அவரது ஆவேசம் வெறும் ஓரவஞ்சனை நடவடிக்கை என்பதைத் திரும்பவும் பகிரங்கமாகச் சுட்டிக் காட்டுவது தவிர்க்க முடியாததாகின்றது.

மேற்படி உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்தியவர்களின் பின்னணி தொடர்பில் உள்ள ஒரு குழு குறித்து தங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று இப்போது வெளிப்படுத்தி இருக்கின்றார் அவர். அத்தரப்பு மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது அவரது சீற்றம். அது உண்மையாகவும் சரியாகவும் இருக்கலாம்.

இந்தத் தொடர் தாக்குதலில் 280 பேர் வரை உயிரிழந்தனர். 500 பேர் வரை படுகாயம் அடைந்தனர். இவர்களில் பெரும்பான்மையானோர் கிறிஸ்தவர்கள். அவர்கள் பெரும்பாலும் தமிழ் கிறிஸ்தவர்கள் அல்லது சிங்கள கிறிஸ்தவர்கள். அவர்களின் மதத்தலைவர் என்ற முறையில் கர்த்தினால் சீற்றம் கொள்வது நமக்குப் புரிகின்றது.

ஆனால், இந்தக் கொடூரத்திற்குப் பத்தாண்டுகளுக்கு முன்னர், பல்லாயிரம் அப்பாவித் தமிழர்கள் இனவாத யுத்தத்தின் பெயரால் கொன்று குவிக்கப்பட்டனர். பலவந்தமாகக் கடத்திக் காணாமலாக்கப்பட்டனர். படு காயப்படுத்தப்பட்டு நிரந்தரமாக அங்கவீனமாக்கப்பட்டனர். அது அரச பயங்கரவாதமாகவும் கட்டவிழ்ந்தது.

அந்தக் கொடூரத்தில் சீரழிந்தவர்களிலும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் கிறிஸ்தவர்கள். ஈஸ்டர் தொடர் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட, பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர்களை விட யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் படுகொலை செய்யப்பட்ட - காணாமலாக்கப்பட்ட - அங்கவீனர்களாக்கப்பட்ட - கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகம். ஆனால் அவர்களுக்காக அவர்களின் மதத் தலைவரான கர்த்தினால் குரல் எழுப்பவில்லை. கண்ணீர் சிந்தவில்லை. சினம் கொள்ளவில்லை. நீதி கோரவில்லை. குறைந்த பட்சம் கண்டிக்கக் கூட இல்லை.

ஏனென்றால் அந்தக் கிறிஸ்தவர்கள் அனைவரும் தமிழர்கள். ஆகையால் அவர்களுக்கு சுண்ணாம்பு தான். வெண்ணெய் இல்லை.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சூத்திரதாரி குறித்து கர்த்தினாலுக்குக் கிடைத்திருக்கும் தகவலை விட, யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் அப்பாவித் தமிழர்களைக் கொன்றொழித்து, பல்லாயிரம் பேரைக் காணாமலாக்கிய கொடூரத்தின் சூத்திரதாரிகள் யார் என்பது பற்றிய தகவல் அவருக்கும் தெளிவானது, உறுதியானது, நமபகமானது.

ஆனால் அவர்களைக் கண்டிக்க - தண்டிக்கக் கோர - கர்த்தினாலுக்கு திராணியோ, முதுகெலும்போ அல்லது நீதியின்பாற்பட்ட நியாய உணர்வோ இல்லை. அப்போதே - 2009 இலேயே - அதைக் கண்டித்து, தண்டிக்க வலியுறுத்தி, நீதி செய்ய வைத்திருந்தால், 2019 இல் இந்த அனைத்தும் நேர்ந்திருக்காதோ என்னவோ...!

இவ்விடயத்தில் - வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்பட்ட விவகாரத்தில் - கர்த்தினாலின் போக்கு ஓரவஞ்சனைச் செயற்பாடு என்பதை மறுத்துரைக்க வடக்கு - கிழக்கு மக்கள் மத்தியில் உள்ள திருச்சபையின் பிரதிநிதிகள் யாரேனும் இருப்பார்களா என்பதையும் கூடத் தேடித்தான் பார்க்க வேண்டும்.

# பெரும்போக நெற்செய்கைக்கு நிலத்தை தயார்ப்படுத்துங்கள்!

## விவசாய அமைச்சு அறிவுறுத்தல்

பெரும்போக நெற்செய்கைக்காக நிலத்தை தயார்ப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளுமாறு விவசாய அமைச்சு விவசாயிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

எதிர்வரும் பெரும்போகத்திற்காக கால்வாய்களை தூய்மைப்படுத்தல், வாய்க்கால்களை தூர் வாருதல், களைகளைப் பிடுங்குதல் மற்றும் நிலத்தை தயார்ப்படுத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளுமாறு அறிக்கை ஒன்றின் ஊடாக விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் விவசாயிகளைத் தெளிவுபடுத்துமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவினால் விவசாயத் திணைக்களம் மற்றும் விவசாய அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என அமைச்சு தெரிவித்துள்ளது.

வானிலை முன்னறிவிப்பின் பிரகாரம், இம்முறை பெரும்போகத்தில் ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

எவ்வாறாயினும், அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் மீண்டும் வறட்சியான காலநிலை நிலவக்கூடும் எனவும், இயன்றளவு நீரை முகாமைத்துவப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, வறட்சியால் இம்முறை சிறுபோகத்தில் 59 ஆயிரத்து 73 ஏக்கர் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது என விவசாய அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# ஊடகர் பிரகாஷ் நினைவாக இன்று இரத்த தான முகாம்




மறைந்த இளம் ஊடகவியலாளரான ஞானப்பிரகாசம் பிரகாஷின் இரண்டாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இரத்ததான முகாமுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரகாஷினுடைய நண்பர்களின் ஏற்பாட்டில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இன்று காலை 8.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை இரத்ததான நிகழ்வு இடம்பெறவுள்ளது.

கொடிகாமத்தைச் சேர்ந்த பிரகாட்ஹ் தனது ஏழாவது வயதில் தசைத்திறன் குறைபாடு (Muscular Dystrophy) நோயினால் பாதிக்கப்பட்டதால் நடக்க முடியாத நிலை ஏற்பட்டது.

அதனால் தரம் ஐந்துடன் தனது பாடசாலை கல்வியை இடைநிறுத்திக்கொண்டார்.

அந்நிலையிலும் அவற்றை எல்லாம் தாண்டி அவர் ஊடக துறையில் தனக்கொன்று ஒரு இடத்தினை தக்க வைத்திருந்தவர்.

சுயாதீன ஊடகவியலாளராக யாழில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளுக்கு கட்டுரைகள், செய்திகள் எழுதி வந்ததமையுடன், உள்நாட்டு, வெளிநாட்டு இணையத்தளங்களுக்கும் செய்திகளையும் கட்டுரைகளையும் எழுதி வந்தார். அதேவேளை சில இணையத்தளங்களில் செய்தி பதிவேற்றுனராகவும் கடமையாற்றி வந்தார். அந்நிலையில் கடந்த 2021 செப்டம்பர் 2ஆம் திகதி கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தார்.

# ஐம்பது லட்சம் ரூபா பெறுமதியான தண்ணீர்க் குழாய்கள் எரிந்து நாசம்

## ஆலையடிவேம்பில் மீண்டும் நாச வேலை?





(வடிவேல் டினேஸ்)

அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பகுதியில் அமைந்துள்ள கூழாவடி பகுதியில் நீர் இணைப்பு செய்ய சேமித்து வைக்கப்பட்ட குழாய்கள் எரிந்து நாசமாகியுள்ளன என ஆலையடி வேம்பு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் தெட்சணமூர்த்தி நவனீதராஜ் தெரிவித்தார்.

நேற்று மதியம் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அக்கரைப்பற்று பனங்காடு முதல் சாகாமம் வரையிலான பகுதிக்கு நீர் இணைப்பைக் கொண்டு செல்லும் வகையில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு சொந்தமான குழாய்கள் செயற்றிட்ட ஒப்பந்தகாரரின் ஊடாக இவ்வாறு சேமித்து வைக்கப்பட்டிருந்தன.

இதன் போது கடந்த மாதன் முதலாம் திகதியும் இவ்வாறு பெறுமதியான குழாய்கள் மொட்டையாகல் பகுதியில் இனந்தெரியாத நபர்களால் எரிக்கக் கப்பட்டிருந்த நிலையில் மீண்டும் நேற்று அடுத்த முதலாம் திகதி இன்னொரு தொகுதி குழாய்கள் எரிக்கப்பட்டுள்ளன.

இதன்போது ரூபா 50 இலட்சத்திற்கும் அதிகமான பெறுமதியுடைய சுமார் 21 நீர் இணைப்புக் குழாய்கள் எரிந்து நாசமாகியுள்ளனஎனவும், இது தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வுள்ளதாகவும் தெட்சணமூர்த்தி நவனீதராஜ் தெரிவித்தார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த நப்சோ நிறுவனத்தின் செயற்பாட்டாளர் கோகுலன் மற்றும் தெட்சணமூர்த்தி நவனீதராஜ் ஆகியோரின் முயற்சியால் தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது. சுமார் ஒரு மணி நேரம் போக்குவரத்து நடவடிக்கைகள் பாதிப்படைந்தமையும் குறிப்பிடத்தக்கது

# விழிப்புலனற்றோருக்கு உதவும் வகையிலான முதல் வீதி சமிக்ஞை விளக்கு மட்டக்களப்பில்

## அமைச்சர் பந்துல குணவர்தனவினால் திறந்து வைப்பு









(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு, செப்.02

வடக்கு கிழக்கு மாகாணத்தில் பார்வையற்றோருக்கான முதலாவது வீதி சமிக்ஞை விளக்கு மட்டக்களப்பில் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் ஊடகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தனவினால் நேற்று முன்தினம் மாலை திறந்து வைக்கப்பட்டது.

கிராமிய கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தனின் அழைப்பின் பேரில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்த அமைச்சர் பந்துல குணவர்தன மட்டக்களப்பு – கல்முனை நெடுஞ்சாலையில் காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நொச்சிமுனை பிரதான வீதியில் நிர்மாணிக்கப்பட்ட வீதி சமிக்ஞை விளக்கை வைபவ ரீதியாக திறந்து வைத்தார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்ட இவ்வீதி சமிக்ஞை இந்தப் பிரதேசத்தில் உள்ள விழிப்புலனற்றோரின் போக்குவரத்துக்காக அமைக்கப்பட்டதாக அமைச்சர் அங்கு குறிப்பிட்டார். இந்த இடத்தில் தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலை மற்றும் உதயம் விழிப்புலனற்றோர் நிலையம் ஆகியன அமையப் பெற்றிருக்கின்றன. இந்த நிலையங்களில் நூற்றுக்கணக்கான விழிப்புலனற்ற மாணவர்கள் ஊடாடுகின்றனர். விழிப்புலனற்ற பலர் இப்பகுதியில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வெள்ளைப்பிரம்பு பயன்படுத்தும் விழிப்புலனற்றோர் பிரயாணஞ் செய்வதற்காக பொதுப்போக்குவரத்து பஸ்களை நிறுத்தும் பொழுது, பல பஸ்ப்சாரதிகள் பஸ்ஸை நிறுத்துவது போன்று பாசாங்கு செய்து பஸ்ஸை நிறுத்தாமலும், இவர்களை பஸ்ஸில் ஏற்றாமலும் சென்றுவிடுகின்றனர் என போக்குவரத்து அமைச்சரிடம் விழிப்புலனற்றவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் பந்துல குணவர்தன, இலங்கையின் எப்பாகத்திலும் இவ்வாறான விசேட தேவையுடையவர்களை காணும் பொழுதும் பஸ் சாரதிகள் அவர்களை ஏற்றிச் செல்ல வேண்டும் அல்லது அவர்களுக்காக வழிவிடவேண்டும் என இலங்கைப் போக்குவரத்து சபைத் தலைவருக்குத் தாம் பணிப்புரை விடுப்பார் எனத் தெரிவித்தார்.

இந்தத் திறப்பு விழா நிகழ்வுகளில் இராஜாங்க அமைச்சர்களான எஸ்.ரீ. பாலகம்லட், சிவனேசத்துரை சந்திரகாந்தன ஆகியோரும், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர், அதன் பொறியியலாளர்கள் மற்றும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு கல்முனை நெடுஞ்சாலையில் ஏற்படுகின்ற வாகன நெரிசலை தடுக்கவும் வீதி விபத்துக்களை தடுக்கவும் மேற்படி வீதி சமிக்ஞை விளக்குகள் பயன்படும் என பலரும் கருத்து தெரிவித்தனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆறாவது வீதி சமிக்ஞை விளக்கு இது என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டு. புதூரில் கூரை ஏறித் திருட முயன்றவர் தப்பியோடுகையில் விழுந்து காலை முறித்தார்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள புதூரில் திருடன் ஒருவன் அவனது பக்கத்து வீட்டின் கூரையை கழற்றி வீட்டில் திருடச் சென்ற போது திருடனைக் கண்டு வீட்டில் உள்ளவர்கள் சத்தமிட்டமையாக் திருடன் அங்கிருந்து தப்பி ஓடுவதற்காக அருகிலுள்ள வீட்டின் கூரை மீது பாய்ந்து தப்பிக்க முயற்சித்திருக்கிறான். அப்போது கீழே விழுந்து கால் உடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலையில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புதூர் 3ஆம் குறுக்கு எல்லை வீதியிலுள்ள வீடு ஒன்றின் உரிமையாளர் குழந்தைகளை வீட்டில் விட்டுவிட்டு அருகிலுள்ள வீட்டிற்குச் சம்பவதினமான நேற்று முன் தினம் மாலை 3.30 மணியளவில் சென்றுள்ளார். இந்த நிலையில் வீட்டின் கூரையை திருடன் ஒருவன் கழற்றுவதை கண்டு சத்தமிட்டதையடுத்து திருடன் கூரையில் இருந்து அருகிலுள்ள மரத்தின் பாய்ந்து ஏறி ஒளித்துக் கொண்டான்.

இந்த நிலையில் திருடனை பிடிப்பதற்காக அயலவர்கள் ஒன்றிணைந் தமையையடுத்து திருடன் அங்கிருந்து தப்பி ஓடுவதற்காக அருகிலுள் வீட்டின் கூரைக்கு பாய்ந்து தப்பிக்க முயற்சித்த போது கீழே வீழ்ந்து, கால் இரண்டாக உடைந்துள்ளதையடுத்து அவன் அங்கிருந்து தப்பிக்க முடியாத நிலையில் இருந்துள்ளான்

இதனையடுத்து அவனைப் பிடித்து வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையக காவல்துறையினர் மேற்கொண்டுவருகின்றனர்.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை

# மீண்டும் அரசை கடுமையாக விமர்சிக்கின்றார் கர்தினால்

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதை தாமதமாக்கும் நடவடிக்கைகள் குறித்து அரசாங்கத்தை கர்தினால் மல்கம் ரஞ்சித் மீண்டும் சாடியுள்ளார்.

பயங்கரவாதக் குழுவினர் ஈவிரக்கமற்ற தாக்குதல்களை மேற்கொள்வதற்கான அனைத்து ஆதரவையும் வழங்கிய குழுவொன்றுள்ளதாக எங்களுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன என கர்தினால் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் இடம்பெறாத சில விடயங்கள் குறித்து தாங்கள் கரிசனை கொண்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் அபுஹிந் என்ற நபரோ குழுவோ இருப்பதாக புதிய தகவல்கள் கிடைத்துள்ளன என கர்தினால் தெரிவித்துள்ளார்.

இந்த ஆதாரம் வெளியானவேளை ஐந்து நீதிபதிகளில் ஒருவர் இந்தப் பெயர் குறித்து கேள்வி எழுப்பியுள்ளார். ஊடகங்கள் இருப்பதால் தன்னால்



விவரங்களை வெளியிட முடியாது எனக் குறிப்பிட்டுள்ளசாட்சி, எழுத்தில் அதுகுறித்த விடயங்களை வழங்கியுள்ளார் என கர்தினால் தெரிவித்துள்ளார்.

# கொழும்புத் துறைமுகத்தில் இந்தியாவின் யுத்தக் கப்பல்!

## பாடசாலை மாணவர்கள் பார்வையிடச்சந்தர்ப்பம்



இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான ஐ.என்.எஸ். டில்லி (INS Delhi) எனும் யுத்த கப்பல் நேற்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்த கப்பல் 163 மீட்டர் நீளமுடையது. கப்பலில் வருகை தந்த கடற்படை வீரர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சுற்றுலா செல்லவுள்ளனர் என இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

அத்துடன், ஐ.என்.எஸ். டில்லி கப்பலை பார்வையிடுவதற்கு பாடசாலை மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் நாளை 3 ஆம் திகதி வரையில் நாட்டில் நங்கூரமிட்டிருக்கும்.

இதன்போது, மேற்கு கடற்பரப்பில் இலங்கை கடற்படைக் கப்பலுடன் பயிற்சி நடவடிக்கைகளிலும் இந்தக் கப்பல் ஈடுபடவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கெஹலியவின் முகமூடி தாங்கிய ஒருவரை பிரேதமாக வைத்து அஞ்சலி ஆர்ப்பாட்டம்

## நேற்று மாலை சுகாதார அமைச்சுக்கு முன்











கொழும்பில் கொட்டும் மழைக்கு மத்தியில் மலர்வலயங்கள் மற்றும் சவப்பெட்டிகளையும் தாங்கி சுகாதார அமைச்சிற்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றுள்ளது.

எதிர்க்கட்சியினர் இணைந்து நேற்றுப் பிற்பகல் இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

சுகாதார அமைச்சருக்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் கொட்டும் மழைக்கு மத்தியில் மலர்வலயங்கள் மற்றும் சவப்பெட்டிகளையும் தாங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் முகப்படம் தாங்கிய முகமூடியுடன் ஒருவர் பிரேதம் போல காட்சியளிக்க அவருக்கு அஞ்சலி செலுத்துவது போல ஆர்ப்பாட்டம் அமைந்தது.

அந்தப் பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததுடன், நீர்த்தாரை பிரயோக வண்டிகளும் தாயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கனடா அனுப்புவார் எனக் கூறி வவுனியாவில் பண மோசடி செய்தவருக்கு விளக்கமறியல்!

கனடா அனுப்புவார் எனக் கூறி வவுனியாவில் பண மோசடி செய்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

வவுனியாவின் பட்டக்காடு, திருநாவற்குளம், தவசிகுளம், மல்லாவி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 6 நபர்களிடம் கனடா அனுப்புவார் எனக் கூறி யாழ்ப்பாணம், நாவற்குழி பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் பணம் பெற்றிருந்தார் எனக் கூறப்படுகின்றது.

ஒருவரிடம் இருந்து 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் 6 பேரிடம் பணம் பெற்றிருந்தமையுடன், பிறிதொருவரிடம் 3 பவுண் சங்கிலி ஒன்றையும் பெற்றுள்ளார். எனினும் கனடா அனுப்பாது மோசடி செய்தார் எனப் பாதிக்கப்பட்ட நபர்கள் வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவில் முறைப்பாடு செய்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் நாவற்குழிப் பகுதியைச் சேர்ந்த 41 வயது நபர் ஒருவரை வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்தனர். மேலதிக விசாரணைகளின் பின்அந்த நபரை வவுனியா நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் அவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

# சூரியனை ஆய்வு செய்வதற்கு இன்று விண்ணில் பாய்கிறது ஆதித்யா எல்-1



விண்வெளியில் இருந்தவாறு சூரியனை ஆய்வு செய்யவிருக்கும் ஆதித்யா-எல்1 விண்கலம் இன்று விண்ணில் ஏவப்படும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

சூரியனை ஆய்வு செய்ய இந்தியாவின் முதல் விண்வெளி ஆய்வகமான ஆதித்யா-எல்1, இன்று சனிக்கிழமை காலை 11:50 மணிக்கு ஸ்ரீஹரிகோட்டா விலிருந்து ஏவ திட்டமிடப்பட்டுள்ளது.

சந்திரயான்-3 வெற்றியைத் தொடர்ந்து, ஆதித்யா எல்-1 குறித்த ஆர்வம் நாடு முழுவதும் எழுந்திருக்கிறது. நிலவில் கால் பதித்த கையுடன் சூரியனை ஆராய இஸ்ரோ விண்கலத்தை அனுப் புகிறது என்றதும், நெருப்புக் கோளமாக இருக்கும் சூரியனில் விண்கலம் எப்படித் தரையிறங்க முடியும் எனச் சிலர் மலைத்துப்போகின்றனர்.

இந்த விண்கலம் விண்வெளியில், பூமிக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள 'லக்ராஞ்சியன் புள்ளி எல்-1' என்னும் இடத்தில்தான் நிலைநிறுத்தப்பட இருக்கிறது.

இதுகுறித்து இஸ்ரோ வெளியிட்டிருந்த அறிக்கையில், சூரியன் - பூமி அமைப்பில் சுமார் 15 லட்சம் கிலோ மீட்டர் தொலைவில் உள்ள லோக்ரேஞ்ச் புள்ளி 1 -ஐ சுற்றி ஒரு ஒளிவட்டப் பாதையில் ஆய்வகம் வைக்கப்படும் என்றும், இந்த புள்ளியை விண்கலம் அடைய 120 நாட்களுக்கு மேல் ஆகும் என்றும் இஸ்ரோ தெரிவித் துள்ளது.

தடையின்றி தொடர்ந்து சூரியனைப் பார்க்கும் வகையில் இந்த ஆய்வகம் அமைக்கப்பட உள்ளதால், அது சூரியன் குறித்து தொடர்ந்து ஆய்வு மேற் கொள்ளும்.

எல் 1 புள்ளியைச் சுற்றியுள்ள ஒளி வட்ட சுற்றுப்பாதையில் ஆய்வகம் வைக்கப்படுவதால் எந்த தடையும் இல்லாமல் சூரியனைத் தொடர்ந்து பார்க்கும் முக்கிய நன்மை கிடைக்கும். சூரியனின் செயல்பாடுகள் மற்றும் விண்வெளி வானிலை ஆகியவை குறித்து தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ளப்படும். சூரியனின் வெளிப்புற அடுக்குகளை கண்காணிக்க ஏழு பேலோடுகளை விண்கலம் சுமந்து செல்கிறது.

நான்கு பேலோடுகள் சூரியனை நேரடியாகப் பார்க்கும். மீதமுள்ள மூன்று பேலோடுகள், லோக்ரேஞ்ச் புள்ளி எல் 1 இல் உள்ள துகள்கள் மற்றும் புலங்களைப் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆதித்யா-எல்1 ஆய்வுத் திட்டத்தின் முழுப் பணிகளும், இந்திய முயற்சியில் மேற்கொள்ளப்படுகிறது. ஆதித்யா செயற்கைக்கோள் தற்போது ஸ்ரீஹரி கோட்டாவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதை பி.எஸ்.எல்.வி- எக்ஸ்எல் என்ற ரொக்கெட் மூலம், இன்று விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

ஆதித்யா-எல்1 திட்டம் மூலம் சூரியனின் வெளிப்பகுதியில் நிலவும் வெப்ப மாறுபாடுகளை கண்டறிவதுடன், சூரிய புயல்களின் தாக்கங்களை யும் கண்டறிய முடியும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

# ஜனாதிபதி மாளிகையை பார்வையிட பத்து நாட்களுக்கு அனுமதியில்லை!

இந்திய ஜனாதிபதி மாளிகையை பார்வையிட 10 நாட்களுக்கு பொது மக்களுக்கு அனுமதி இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் எதிர்வரும் 10 நாட் களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் மிக அதிகார மிக்க அமைப்புகளில் ஒன்றான ஜி-20 அமைப்பின் உச்சி மாநாடு டில்லி பிரகதி மைதானத்தில் உள்ள பாரத் மண்டபத்தில் எதிர்வரும் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளன.

இந்த மாநாட்டில் 25 நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாநாட்டில் கலந்துகொள்ளும் தலைவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், இந்திய ஜனாதிபதி மாளிகைக்குள் நேற்று முதல் எதிர்வரும் 10 ஆம் திகதி வரையில் பார்வையா ளர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்



என்று இந்திய ஜனாதிபதி இல்லம் அறி வித்துள்ளது.

# வாக்னர் தலைவர் உயிருடன் இருக்கிறார்: ரஷ்யாவில் அதிகரிக்கும் பதற்ற நிலை!

விமான விபத்தில் உயிரிழந்து விட்டார் என கூறப்படும் தனியார் இராணுவ படையான வாக்னர் குழுவின் தலைவர் யெவ்கெனி பிரிகோஷின் தற்போது உயிருடன் நலமோடு இருக்கிறார் என்று தெரிவிக்கும் காணொளி ஒன்று வெளியாகியுள்ளது.

ரஷ்யாவின் தனியார் இராணுவ படையின் தலைவராக இருந்து வருபவர் யெவ்கெனி பிரிகோஷின். இந்த படை ரஷ்ய புடினின் துணை இராணுவ படை என்று வர்ணிக்கப்பட்டு வருகிறது. ரஷ்ய இராணுவ படைக்கு வாக்னர் படை பக்கபலமாக இருந்து வருகிறது.

தற்போது இடம்பெற்று வரும் உக்ரைன் போரில் வாக்னர்படை முக்கிய பங்காற்றி வருகிறது. உக்ரைன் போரின் போது முக்கிய நகரங்களை இந்த படை வீரர்கள் தான் கைப்பற்றினார்கள்.

கடந்த 2 மாதங்களுக்கு முன்பு வாக்னர் குழு தலைவருக்கும், ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது என கூறப்பட்டது. யெவ்கெனி பிரிகோஷின் மீது தேச துரோக வழக்கு பதிவு செய்யப்பட்டது.

வாக்னர் படையினர் மாஸ்கோவில் ஆயுதங்களுடன் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இதனால் பதற்றமான சூழ்நிலை நிலவியது. பின்னர் 2 நாளில் இந்த பிரச்சினை முடிவுக்கு வந்தது. வாக்னர் குழுவினருக்கு மன்னிப்பு வழங்குவதாக ரஷ்யா அறிவித்தது.



இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு விமான விபத்தில் வாக்னர் குழு தலைவர் யெவ்கெனி பிரிகோஷின் உள்ளிட்ட 10 பேர் உயிரிழந்தனர் என கூறப்பட்டது. ரஷ்யாவின் சதி செயலால் அவர் கொல்லப்பட்டார் என குற்றம் சாட்டப்பட்டது.

இவ்வாறான சூழ்நிலையில், விமான விபத்தில் இறந்ததாக கருதப்பட்ட யெவ்கெனி பிரிகோஷின் காரில் சென்றபடி பேசுவது போன்ற காணொளி வெளியாகி உள்ளது. அதில் அவர் நான் தற்போது ஆப்பிரிக்காவில் இருக்கிறேன், நான் நலமாக இருக்கிறேன். இன்னும் உயிருடன் தான் இருக்கிறேன் என்று கூறுவது போல காணொளியில் இடம் பெற்றுள்ளது.

இந்த காணொளி தற்போது ரஷ்யாவில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. ஆனால் இந்த காணொளி எங்கு எடுக்கப்பட்டது. எப்போது எடுக்கப்பட்டது? என்ற விவரம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

காணொளியில் அவர் பேசுவது உண்மைதானா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இதனால் அவர் உயிரோடு இருக்கிறாரா?அல்லது இறந்து விட்டாரா? என்பது மர்மமாக உள்ளது.

இந்த புதிய காணொளி சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது.

# பாகிஸ்தானில் திருமண விருந்தில் உறவினர்கள் மத்தியில் மோதல்!




பாகிஸ்தானில் நடைபெற்ற திருமண விருந்து நிகழ்ச்சியில் உறவினர்கள் இடையே மோதல் ஏற்பட்டு ஒருவர் மீது ஒருவர் நாற்காலிகளை வீசும் காணொளி வெளியாகி பரவிவருகின்றது.

திருமணத்திற்கு வந்தவர்கள் மேசைகளில் அமர்ந்து விருந்து உணவை உட்கொள்வதில் இருந்து காணொளி ஆரம்பமாகின்றது.

சிறிது நேரத்தில் உறவினர்களுக்கு இடையே தகராறு ஏற்படுகிறது. உடனே ஒருவரையொருவர் தாக்குகிறார்கள்.

பின்னர் சண்டை தீவிரமாகி ஒருவர் மீது ஒருவர் நாற்காலிகளை வீசி தாக்கும் காட்சிகள் வெளியாகியுள்ளன. மோதலை தடுக்க சிலர் முயன்ற நிலையிலும் அது கைகொடுக்கவில்லை. மாறாக மோதல் தீவிரமாவது போன்று காட்சிகள் உள்ளன.

# அழகான கையெழுத்து!



உலகிலேயே மிகவும் அழகான கையெழுத்து என்ற பெருமையை நேபாளத்தை சேர்ந்த பெண் ஒருவர் பெற்றுள்ளார்.

பிரகிருதி மல்லா என்ற குறித்த பெண் 14ஆம் வயதில் 8 ஆம் வகுப்பு படிக்கும் போது எழுதிய கடிதத்தை பலர் சமூக வலைத்தளங்களில் வைரலாக்கி வருகின்றனர்.

பிரகிருதி மல்லா என்ற குறித்த பெண் ஐக்கிய அரபு அமீரகத்தின் 51ஆவது ஆண்டு ஒற்றுமை தினத்தை முன்னிட்டு வாழ்த்து கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

இந்த கடிதத்தை பார்த்த சிலர் இவருடைய கையெழுத்து மிகவும் அழகாக உள்ளது என குறிப்பிட்டு அவரது கடிதத்தை சமூக வலைத்தளங்களில் வைரலாக்கி வருகின்றனர்.



# விவசாயிகளின் விளை நிலங்களை விடுவித்தல் தொடர்பில் ஆராய்வு

## முல்லைத்தீவு நித்தகைக் குளத்துக்கு அமைச்சர் காதர் மஸ்தான் விஜயம்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

முல்லைத்தீவு மாவட்டம் கரை துறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நித்தகைக் குளம் பகுதிக்கு மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும், கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான் தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் உள்ளிட்ட அதிகாரிகள் குழு ஒன்று கள விஜயம் ஒன்றை மேற் கொண்டது.

உள்நாட்டில் நடைபெற்ற யுத்தம் காரணமாகக் குறித்த பகுதியில் பல ஆண்டுகளாக பயிர் செய்யப்படாத வயல் நிலங்கள் காடுகளாகவும், புற்கள் வளர்ந்து புதர்களாகவும் காணப்படு கின்றன.

இவற்றில் சில பகுதிகளை வனவளத் திணைக்களத்தினர் வனப்பகுதிக்கு சொந்தமான இடமாக எல்லைப்படுத்தி யுள்ளனர்.

இதனால் விவசாயத்தை வாழ்வா தாரமாகக் கொண்ட விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் மக்களின் காணிகளை விடுவித்தல் தொடர்பிலும் நித்தகைக் குளம் உடைப் பெடுத்து இன்றுவரை சீர்செய்யப்ப டாமை இருப்பது தொடர்பிலும், நித் தகைக்குளத்தின் பிரதான வாய்க்காலை எதிர்காலத்தில் புனரமைப்பு செய்தல் தொடர்பிலும் ஆராயும் நோக்கில் இந்தக் கள விஜயம் அமைந்திருந்தது.

இந்த கள விஜயத்தில் முல்லைத் தீவு மாவட்ட அரச அதிபர் அ.உமா மகேஸ்வரன், மாவட்ட மேலதிக அரச அதிபர் க.கனகேஸ்வரன்(நிர்வாகம்), கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி. உமாமகள், மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர், மாவட்ட நில அளவையாளர், மாவட்ட வன அதிகாரி, காணிப் பகுதி உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# குடிதண்ணீர் தொகுதி அமைப்பு

**(கே. எ. ஹமீட் )**

கல்முனையில் கடந்த 18 வருடங் களாக இயங்கி வரும் தாருல் அர்கம் நிறுவனத்தில் மாலை நேர குர்ஆன் பாடசாலையில் கற்றல் நடவடிக்கை களில் ஈடுபடும் மாணவர்களின் நலன் கருதி குடிதண்ணீர் தொகுதி அமைப்பு ஒன்றை அமைத்துத் தருமாறு அதன் நிர்வாகிகள் ரஹ்மத் பவுண்டேஷனிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமை வாக வை.டபிள்யூ.எம்.ஏ. பேரவையின் ஒருங்கிணைப்பில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும், கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூர் அவர்களால் குறித்த நீர்த்தொகுதி அமைப்பு அமைக்கட்டு உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக் கப்பட்டது.

# கோண்டாவில் காளி கோவில் தீர்த்தம்





கோண்டாவில் மேற்கு கந்தர் வளவு ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோவில் (காளி கோவில்) வருடாந்த மஹோற்சவத்தின் தீர்த்தத் திருவிழா புதன்கிழமை (30) நடைபெற்றது.

பிள்ளையாரும் காளி அம்பாளும் தீர்த்தமாடி வெளி வீதி வலம் வருவர். அப்போது, அடியார்கள் தீ மிதித்து தமது நேர்த்திக்கடனை நிறைவேற்றி வருவது பல்லாண்டு காலமாக இந்த கோவிலில் நடைபெற்று வருகின்றது.

இந்தக் கோவிலை தான் தோன்றித் தாயவள் கோவில் என்று அழைப்பதுண்டு. சித்திரைப் பௌர்ணமி அன்று ஊரவர்களும் அயலவர்களும் நேர்த்தி வைத்து தமது நேர்த்தி நிறைவேறியவுடன் ஏலம் எடுத்து வருவது இந்த கோவிலின் சிறப்புக்களுள் ஒன்று.

# பெண்களுக்கான உதைபந்தாட்டத்தில் வடக்குச் சம்பியனாக யாழ். மகாஜனா!






(அஸ்ஹர் இப்றாஹிம்)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான பெண்கள் உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் மகாஜனா கல்லூரியின் 17 வயதுக்கு உட்பட்ட பெண் கள் அணி சம்பியனாகியுள்ளது.

மகாஜனா கல்லூரியின் 17 வயதுக்கு உட்பட்ட பெண்கள் அணி இறுதி போட்டியில் அருணோதயக் கல்லூரியை சமநிலை தவிர்ப்பு உதையில் 3:2 என்ற கோல்கள் கணக்கில் வென்று இந்த சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

மகாஜனா கல்லூரியின் 17 வயதுக்கு உட்பட்ட பெண்கள் அணி தொடர்ந்து 2 ஆவது முறையாகவும் சம்பியனாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தொழில் வாழிகாட்டல் செயலமர்வு



(பௌசுல் றிபாஸ்)

தொழில் வழிகாட்டல் மற்றும் திறன் மேம்படுத்தல் சம்பந்தமான செயலமர்வொன்று சம்மாந்துறை அல் – மர்ஜான் தேசிய பாடசாலையில் இடம்பெற்றது.

மெற்றோ பொலிட்டன் கல்வி நிறுவனம் மற்றும் மனித மேம்பாட்டு அமைப்பின் ஏற்பாட்டில் எம். எஸ். காரியப்பர் மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மெற்றோ பொலிட்டன் கல்வி நிறுவனத்தின் ஸ்தாபக தலைவரும், முன்னாள் கல்முனை மாநகர சபையின் முதல்வருமான கலாநிதி . சிராஸ் மீராசாஹிப் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

சுமார் நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள் கலந்து கொண்ட இந்தச் செயலமர்வில் பெறுமதியான சான்றிதழ்களும் அதிதிகளால் வழங்கப்பட்டன.




# தாய்- சேய் நலன் மேம்பாட்டில் இலங்கை சிறந்த நிலையில்!

## வைத்தியக் கலாநிதி கேதீஸ்வரன் தெரிவிப்பு

(த.சுபேசன் )

தாய்– சேய் நலன் மேம்பாட்டில் தெற்காசியாவிலேயே இலங்கை சிறந்த நிலையில் காணப்படுகிறது என்று யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை கொடிகாமத்தில் இடம்பெற்ற, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கவிஞர் ஜென்சன் றொனால்டின் நூல் வெளியீட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்துள்ளவை வருமாறு–

தாய் மற்றும் சிசுவுடைய ஆரோக்கியத்தில்தான் ஓர் நாட்டினுடைய ஆரோக்கியம் தங்கியுள்ளது. அந்த வகையில் தாய்– சேய் மரண விகிதத்தை வைத்தே ஒரு நாட்டினுடைய, மாவட்டத்தினுடைய ஆரோக்கிய நிலையை கணிக்க முடியும்.தாய்–சேய் நலன் மிக மிக முக்கியமானது. அந்த விடயத்தைப் பொறுத்தவரையில் எமது நாட்டில் தாய்–சேய் மரண விகிதம் தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிக குறைவடைந்துள்ளது. தாய்–சேய் நலனில் தெற்காசியாவிலேயே இலங்கை சிறந்த நிலையில் காணப்படுகிறது.

தாய்–சேய் நலன் விடயத்தில் எமது நாடு சிறந்து விளங்கக் காரணம் எமது நாட்டில் உள்ள நோய்த் தடுப்பு பொறிமுறை. எமது நாட்டில் சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர், குடும்ப நல உத்தியோகத்தர் என சிறந்த நோய்த் தடுப்புக் கட்டமைப்புக் காணப்படுகின்றது. இந்தக் கட்டமைப்பை வைத்து நாட்டில் பல தொற்று நோய்களை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளோம்.

ஒரு காலத்தில் மலேரியா பெரிய ஒரு உயிர் கொல்லி தொற்று நோயாக இருந்தது.அது தற்போது கட்டுக்குள் உள்ளது. அத்துடன் செங்கமாரி, டெங்கு போன்ற பல தொற்றுநோய்கள் முழுக் கட்டுப்பாட்டுக்குள் உள்ளன. பல நோய்களைக் கட்டுப்பாடடுக்குள் கொண்டு வர உதவியாக இருந்தது எமது நாட்டில் காணப்படுகின்ற சுகாதார கட்டமைப்பு.

கடந்த வருடங்களில் உலகளாவிய ரீதியாக பாரிய தாக்கத்தை ஏற்படுத்திய கொவிட் தொற்றை எமது சுகாதார துறையால் கட்டுப்படுத்த முடிந்தது. உயிரிழப்புக்களைக் குறைக்கக் கூடியதாக இருந்தது. எமது நாட்டில் உள்ள சிறந்த சுகாதார கட்டமைப்பு வல்லரசு நாடுகளில் கூட இல்லை. அதனால்தான் அங்கு கொவிட்டால் பாரிய இழப்புக்கள் ஏற்பட்டன. அந்த நாடுகளில் நோய்த் தடுப்பு கட்டமைப்பு வளர்ச்சியடையவில்லை.

எமது நாட்டில் உள்ள நோய்த் தடுப்பு சுகாதாரக் கட்டமைப்பை ஸ்தாபித்தவர் செல்லப்பா என்ற ஓர் தமிழர். இலங்கையின் முதலாவது சுகாதார வைத்திய அதிகாரியும் அவரே. அவர் களுத்துறையில் முதன் முதலாக இந்த சுகாதார கட்டமைப்பை உருவாக்கினார். காலப் போக்கில் அது நாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டது. இந்த சிறந்த கட்டமைப்புதான் தாய்–சேய் மரண விகிதம் குறைவாக இருக்க பிரதான காரணம்.–என்றார்.




# பாடசாலையில் இருந்து சமூக ஒழுக்கம் உருவாக்கப்பட வேண்டியது அவசியம்

## கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர் சஹூதுல் நஜீம் தெரிவிப்பு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

பாடசாலை மட்டத்தில் இருந்து சமூக ஒழுக்கம் உருவாக்கப்பட வேண்டியது அவசியம். இன்றைய மாணவர்கள் நாளைய சமூகத்தின் தலைவர்கள். எனவே சமூகத்தினுடைய ஒழுக்க விழுமியங்கள் பாடசாலை மாணவர் மட்டத்தில் இருந்து உருவாக்கப்பட வேண்டும்.

இவ்வாறு கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹூதுல் நஜீம் தெரிவித்தார்.

மருதமுனை அல்–ஹம்றா வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த புலமையாளர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம்.எம். முஹம்மட் நியாஸ் தலைமையில் பாடசாலை பிரதான கேட்போர் கூடத்தில் (30) நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே வலயக்கல்வி பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.



தொடர்ந்து உரையாற்றும் போது,

இப்பாடசாலையின் இலச்சினையிலும் அதன் மகுட வாசகத்திலும் கல்வி, ஒழுக்கம், பணிவு என்ற மூன்று விடயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இன்று நாம் கல்வியில் ஓரளவு நிமிர்ந்து நின்றாலும் மாணவர் மத்தியிலே ஒழுக்கம், பணிவு குறித்து சமூக மட்டத்தில் கேள்வி எழுப்பப்படுகிறது. பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஒழுக்கம் உருவாக்கப்பட வேண்டும்.

இன்று மாணவர்களைக் கையடக்க தொலைபேசி, போதை பொருள் ஆகிய இரு அரக்கன்கள் சீரழிகின்றன. எங்கு பார்த்தாலும் பிரச்சினை. வகுப்பில் மாணவர்களுக்கிடையில் பிரச்சினை, பாடசாலையில் பிரச்சினை, வீதியிலும் வீட்டிலும் பிரச்சினை. இறுதியில் பொலிஸ் நிலையம், நீதிமன்றங்கள் வரை ஒவ்வொரு நாளும் மாணவர் சார்ந்த பிரச்சினைகள் செல்கின்றன.

இது ஆரோக்கியமான விடயமல்ல. வளர்ந்து வரும் மாணவர்கள் மத்தியில் ஒழுக்கம் நிலை நாட்டப்பட்டு ஒரு சீரான சமூக கட்டமைப்பை உருவாக்குவதற்கு சமூக அமைப்புக்கள், சிவில் சமூகத்தினர், பெற்றோர்கள் முன்வர வேண்டும். அப்போதுதான் நாளைய ஆரோக்கியமான சமூகத்தை நம்மால் கண்டுகொள்ள முடியும்.

அதேபோன்று மாணவர்கள் மத்தியில் பணிவு இருக்கிறதா? என்பதும் கேள்விக் குறியாக இருக்கிறது. பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் வீதிகளிலும் பொது இடங்களிலும் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டி இருக்கிறது. ஒரு பாடசாலை மாணவன் தனது சைக்கிளில் இருந்து கொண்டும், ஆசிரியர் நின்று கொண்டும் உரையாடுவதை நாம் கண் முன்னே காண்கின்றோம். இதுதான் எமது பாடசாலையின் மகுட வாசகத்தில் உள்ள பணிவா? என்று கேட்கத் தோன்றுகிறது.

நமது கடற்கரை பகுதிகளில் வெளியூர் பிரதேசங்களில் இருந்து அதிக அளவில் மக்கள் வந்து தமது ஓய்வு நேரத்தை குடும்பத்தோடு பேசி, கதைத்துக் கொண்டிருக்கும் போது, அருகில் இருக்கிற நமது மாணவர்கள் ஒன்று கூடிக்கொண்டு அவர்கள் பேசுகின்ற பேச்சுக்களை கேட்கின்ற போது இவர்கள் நமது பகுதியில் இருக்கும் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் என்று அறியும் போது வெட்கப்பட வேண்டியுள்ளது.–என்றார்.

இந்த நிகழ்வில் கல்முனை கல்வி வலய பிரதி கல்வி பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபிர் கௌரவ அதிதியாக கலந்து கொண்டார். விசேட அதிதிகளாக பிரதி கல்வி பணிப்பாளர் திருமதி பி. ஜிஹானா ஆலிப், திருமதி எம். எச். றியாஸா ஆகியோர் கலந்து கொண்டனர். சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ஏ.டப்ளியு. சமீம், கோட்ட கல்வி பணிப்பாளர் யூ.எல்.றியால், உதவிக் கல்வி பணிப்பாளர் எம்.எல்.எம். முதர்றிஸ், பாடசாலையின் அபிவிருத்தி சங்க செயலாளர் பி.எம்.நஸ்றுதீன், உறுப்பினர் நளீம் எம். பதுருதீன் உட்பட பழைய மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.09.2023

## மேஷம்

இன்று வெற்றிகரமான பலன்கள் காண உறுதியும் திட்டமிடலும் அவசியம். பொறுப்புகள் அதிகமாக இருந்தாலும் நீங்கள் உற்சாகமாக இருக்க வேண்டும்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படாது. கவனக்குறைவு காரணமாக பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் நடக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் மகிழ்ச்சி நிலவும். ஆழ்ந்த புரிந்துணர்வு ஏற்பட தேவையற்ற தீய உணர்வுகளை தவிர்க்கவும்.

இன்று வாய்ப்புக்கள் குறைந்து காணப்படும். சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

கண்களில் எரிச்சல் ஏற்படும் என்பதால் அதில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

## ரிஷபம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவித்து மகிழ்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

புதிய வேலை வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். நீங்கள் பணிகளை எந்த இடையூறும் இல்லாமல் மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். உங்கள் குடும்பத்தில் நடக்கவிருக்கும் ஒரு முக்கியமான நிகழ்ச்சி பற்றி உங்கள் துணையுடன் வெளிப்படையாக பேசுவீர்கள்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்கும். சேமிப்பு நிலை சிறப்பக இருக்கும். இதனால் நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும்.

உங்களின் மகிழ்ச்சியான மனநிலை காரணமாக சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.

## மிதுனம்

இன்று உங்களுக்கு சாதகமான நாளாக அமையும். உங்கள் விருப்பங்கள் பூர்த்தியாகலாம் நீங்கள் சமநிலையோடு காணப்படுவீர்கள். அனைத்து விஷயங்களிலும் கட்டுப்பாட்டுடன் இருப்பீர்கள்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான சூழல் காணப்படும். புதிய வாய்ப்புகள் உங்களுக்கு வந்து சேரும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல உறவை பராமரிக்க இயலும்.

சுதந்திரமான நிதி நிலைமையும் நிதியில் ஸ்திரத்தன்மையும் காணப்படும். நீங்கள் உங்கள் நிதி நிலையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இதனால் நீங்கள் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள்.

## கடகம்

இன்று பயணம் செய்வதில் முனைந்து இருப்பீர்கள். உங்களைச் சுற்றி மாற்றங்கள் ஏற்படுவதை உணர்வீர்கள்.மற்றவர்களுடன் பேசும்போது கவனமாகப் பேச வேண்டும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது சிறந்த பலன் தரும்.

உங்கள் கடின உழைப்பின் காரணமாக உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.படைப்பாற்றல், புதுமையான திறமை மற்றும் திட்டமிடல் மூலம் நீங்கள் பணியை சிறப்பாக செய்வீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் சமநிலையான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். உறவில் திருப்தியை தக்க வைக்க நீங்கள் எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.

## சிம்மம்

இன்று நற்பலன் காண நீங்கள் மேற்கொள்ளும் செயல்கள் பயனுள்ளதாக இருக்கும். இறை மந்திரம் மற்றும் ஸ்லோகங்கள் கூறுவதன் மூலம் நீங்கள் திருப்தியாக உணர்வீர்கள்.

உங்கள் பணிகளை திட்டமிட்டு ஒழுங்கமைத்து மேற்கொள்வதன் மூலம் வெற்றி காண்பீர்கள்.

உங்கள் மனதில் குழப்பமான எண்ணங்கள் காணப்படும். அதனால் உங்கள் துணையுடன் நேர்மறையான உணர்வுகளை வெளிப்படுத்த மாட்டீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிக்க நீங்கள் நம்பிக்கையான உணர்வுகளை பகிர்ந்து கொள்ள வேண்டும்.

பணத்தை கையாளும்போது கவனமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். பணத்தை செலவு செய்யும் போது அதிக செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

தலைவலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

## கன்னி

இன்று நீங்கள் அதிக முயற்சி எடுப்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். இது உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடத்தில் சாதகமான சூழ்நிலைகள் காணப்படும். இதனால் நீங்கள் பணிகளை மகிழ்ச்சியுடன் மேற்கொள்வீர்கள். கடினமான பணிகளையும் திட்டமிட்டு எளிமையாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பேசுவீர்கள். இது உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணவரவு நிலையாகவும் அதிக அளவிலும் காணப்படும். இன்று நீங்கள் அதிக பணம் சம்பாதிப்பீர்கள். அதன் மூலம் திருப்தி காண்பீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.

## துலாம்

இன்று மிகவும் மகிழ்ச்சியான நாள். மறக்கமுடியாத தருணங்களை அனுபவிப்பீர்கள். சவாலான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் திறமை மூலம் நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். நீங்கள் கடினமான பணிகளையும் எளிமையாக ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் உற்சாகமான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் நெருங்கிய நண்பரின் திருமண வைபவத்தில் கலந்து கொள்வதன் மூலம் நீங்கள் இருவரும் நெருக்கமாவீர்கள்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். நீங்கள் அதிக பணம் சம்பாதிப்பீர்கள். இது உங்கள் எதிர்காலத்திற்கு உதவும்.

உங்களின் சந்தோஷமான மனநிலை காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியம் பராமரிப்பீர்கள்.

## விருச்சிகம்

முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. இன்று உங்கள் செயல்களில் கவனம் கொள்ள வேண்டிய நாள். உணர்ச்சிவசப்படுவதலை தவிர்க்க வேண்டும். செயல்களை திட்டமிட்டு மேற்கொண்டால் வெற்றி பெறலாம்.

நீங்கள் சக பணியாளர்களால் சில பிரச்சினைகளை எதிர்கொள்வீர்கள். பொறுமையுடன் தொடர்ந்து செயலாற்றுங்கள்.

தகவல் தொடர்பில் ஏற்படும் பிரச்சினை காரணமாக கருத்து வேறுபாடு காணப்படும். இது புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் பாதிக்கும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் செய்ய நேரும். அதனால் நீங்கள் கடன் வாங்க நேரலாம்.

பதட்டம் காரணமாக கால் வலி ஏற்படலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.09.2023




இன்று சவால்கள் நிறைந்து காணப்படுவதால் சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் வழக்கமான பணிகளை மேற்கொள்வதை கடினமாக உணர்வீர்கள்.முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். அமைதியாக இருப்பதன் மூலம் நன்மை பெறலாம்.

பணியின்போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இந்த சூழ்நிலையை சமாளிக்க பொறுமை அவசியம். சக பணியாளர்களுடன் அமைதியான முறையில் உறவாட வேண்டும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான உறவை தக்க வைத்துக் கொள்ள நட்பான அணுகுமுறை தேவை. உறவில் நல்லிணக்கம் ஏற்பட இருவரும் நல்ல புரிந்துணர்வை பராமரிக்க வேண்டும்.

தேவையற்ற செலவுகள் காரணமாக அதிக பணம் விரயமாகும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




இன்று உங்களுக்கு சீரான பலன்கள் கிடைக்கும் நாள்.இன்று நீங்கள் புத்துணர்ச்சியுடன் இருப்பதாக உணர்வீர்கள். இன்று சுப நிகழ்சிகள் நடப்பதற்கான சாத்தியம் உள்ளது.

பணியைப் பொறுத்தவரை முன்னேற்றகரமான பலனுக்கு சாத்தியம் உள்ளது. உங்கள் கீழ் பணிபுரிபவர்களுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள்.

நண்பரின் திருமண வைபவத்தில் கலந்து கொள்வதன் மூலம் இன்றைய நாள் இனிமையாக இருக்கும்.இதனால் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணப்புழக்கம் சீராக இருக்கும். சேமிப்பு நிலை உயர்வதற்கான சாத்தியம் உள்ளது. இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பதட்டமான மன நிலையில் காணப்படுவீர்கள். அதனால் உங்கள் முயற்சிக்கு வெற்றி கிடைப்பது கடினம். உங்கள் அன்றாட செயல்களை மேற்கொள்ளும்போது கவனம் தேவை.

குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பது கடினமாக காணப்படும். உங்கள் பணிகளை முடிப்பதில் தாமதம் காணப்படும்.

தவறான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் சூடான வாக்குவதங்கள் ஏற்படும். இது உறவில் மகிழ்ச்சியையும் அமைதியையும் பாதிக்கும்.

இன்று வீணான செலவுகள் காணப்படும். உங்கள் குடும்பத்திற்காக தேவையற்ற செலவுகளை செய்வீர்கள். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. உங்களுக்கு கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று நன்மை தீமை இரண்டும் கலந்த நிச்சயமற்ற பலன்கள் காணப்படும். எல்லா விஷயங்களிலும் பொறுமை மேற்கொள்வதன் மூலம் வெற்றி காணலாம்.

பணியில் கவனக்குறைவு ஏற்படலாம். எனவே நீங்கள் மேற்கொள்ளும் பணிகளில் கவனம் தேவை.

உங்கள் துணையின் விருப்பபடி நடப்பதும் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வதும் நல்லுறவை வளர்க்க உதவும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். உங்களால் முடிந்த அளவு சேமிக்க வேண்டும்.

அதிக பதட்டம் காரணமாக முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியாக இருப்பதும் பிரார்த்தனை மேற்கொள்வதும் சிறந்த பலன் தரும்.

